CAREERINDIA

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8 ]
Total No. of Printed Pages : 8 ]
ಒಟ್ಟು ಪ್ರಶೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]
Total No. of Questions : 38 ]
ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**Code No. : 85-T**

# A

**CCE RF**
**CCE RR**
**REVISED**

Question Paper Serial No. **21**

இங்கிருந்து பிரிக்கவும்

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh & Regular Repeater )**

ದಿನಾಂಕ : 09. 04. 2020 ] [ Date : 09. 04. 2020
ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

TEAR HERE TO OPEN THE QUESTION PAPER
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

Tear here

www.careerindia.com

CAREERINDIA



I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $8 \times 1 = 8$

1. கி.பி. 1453-ல் கான்ஸ்டாண்டிநோபில் நகரத்தை கைப்பற்றியவர்கள்

   (A) அரேபியர்

   (B) ஆட்டோமன் துருக்கியர்

   (C) இத்தா யர்

   (D) போர்த்துக்கீசியர்

2. வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்கு தலைமையேற்று நடத்திய காங்கிரஸ் இயக்கத்தைச் சாராத தலைவர்

   (A) கஸ்தூர்பா

   (B) Dr. B.R. அம்பேத்கார்

   (C) ஜெயபிரகாச நாராயணன்

   (D) மவுலான அப்துல் கலாம் ஆசாத்

3. சீனப் பிரதமர் சூயன் லாய் உடன் பஞ்சசீலக் கொள்கையில் கையெழுத்திட்ட இந்தியப் பிரதமர்

   (A) ஜவஹர்லால் நேரு

   (B) லால் பகதூர் சாஸ்திரி

   (C) இந்திரா காந்தி

   (D) அடல் பிகாரி வாஜ்பாய்

www.careerindia.com

4. 'பா கா சங்கம்' ஏற்படுத்தி பெண் குழந்தைகளுக்கு அறிவுரை வழங்கி அவர்கள் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்கும் அமைப்பு

(A) குழந்தை உரிமை பாதுகாப்பு நிறுவனம்

(B) குழந்தைகள் கிராம சபை

(C) குழந்தை பாதுகாப்பு குழு

(D) அங்கனவாடி மையம்

5. கார்கிலுக்கு அருகிலுள்ள டிராஸ் என்ற இடம் மிகவும் குறைந்த வெப்பநிலை பதிவாகும் இடமாகும். காரணம் அது

(A) சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழும் பகுதியில் அமைந்துள்ளது

(B) கடலுக்கு அருகில் அமைந்துள்ளது

(C) மிகுந்த உயரத்தில் அமைந்துள்ளது

(D) தென்மேற்கு பருவக்காற்றால் பாதிக்கப்பட்டுள்ளது

6. நமது அரசியல் அமைப்புச் சட்டவிதி 21 வ யுறுத்துவது யாதெனில்

(A) தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடி இனமக்களுக்கும் கல்வியை வழங்க அரசு ஒத்துழைக்க வேண்டும்

(B) சிறுபான்மையோர் கல்வி கூடங்களை ஏற்படுத்தி தருவது

(C) சமூக நீதியையும் நலவாழ்வையும் வழங்குவது மாநில அரசின் கடமை

(D) ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமை கல்வியைப் பெறுவது



www.careerindia.com

CAREERINDIA



7. பின்வருவனவற்றுள் எது அரசின் வரிகளற்ற வருமானம் ஆகும்

   (A) சரக்கு மற்றும் சேவை வரி (GST)

   (B) பல்வேறு தண்டனைத் தொகை

   (C) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரி

   (D) அஞ்சல் வரி

8. வெண்மை புரட்சியின் தந்தையென போற்றப்படுபவர்

   (A) Dr. பிரதாப் ரெட்டி

   (B) நரேஷ் கோயல்

   (C) வர்கிஸ் குரியன்

   (D) கிரண் மஜும்தார் ஷா

II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி : $8 \times 1 = 8$

9. வங்காளத்தில் இரட்டை ஆட்சியை ஏற்படுத்தியவர் யார்?

10. சதிப்பழக்கத்தை ஒழிக்க ராஜாராம் மோகன் ராய் அவர்களுக்கு கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு எவ்வாறு ஒத்துழைப்பு நல்கினார்?

11. மனித உரிமைகள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

12. பெண் கருச்சிதைவு என்றால் என்ன?

13. வெப்பமண்டல இலையுதிர் காடுகள் ஏன் பருவக் காற்றுக் காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன?

14. மக்களடர்த்தி என்றால் என்ன?

15. பண்டமாற்று முறை வாணிபம் (பொருள் உருவில் பணம்) என்றால் என்ன?

16. உலக நுகர்வோர் இயக்க வரலாற்றில் மார்ச்-15, 1962ம் நாள் ஏன் ஒரு முக்கிய நாளாக கருதப்படுகிறது ?



www.careerindia.com

CAREERINDIA



III. பின்வரும் வினாக்களுக்கு இரு வாக்கியங்களில் விடையளிக்கவும் : 8 × 2 = 16

17. துணைப்படைத்திட்டத்தின் மூலம் ஆங்கிலேயர் எவ்வாறு இந்தியப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர் ?

18. போர்த்துக்கீசியரின் பிடியி ருந்து 1961-ல் கோவா எவ்வாறு விடுதலையடைந்தது ?

19. இந்திய வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்கள் யாவை ?

அல்லது

ஐ.நா. வின் பாதுகாப்பு சபையின் செயல்பாடுகள் குறித்து விவரி.

20. சமுதாய படிநிலைகளின் பல்வேறு முக்கிய வடிவங்கள் யாவை ?

அல்லது

முன்னாள் முதலமைச்சர் D. தேவராஜ அரஸ் 1970-ல் எவ்வாறு பல சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தினார்?

21. கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

22. மண்ணரிப்புக்கான காரணங்கள் யாவை ?

23. பெண்களின் சுய உதவிக்குழுக்கள் எவ்வாறு பெண்களுக்கு கௌரவத்தையும் தன்னம்பிக்கையையும் தருகிறது என்பதை விவரி.

24. உலகமயமாக்கல் எவ்வாறு நுகர்வோருக்கு நன்மை பயக்கக்கூடியதாக உள்ளது என்பதை தெளிவுப்படுத்துக.

IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் : 9 × 3 = 27

25. புதிய சிந்தனைகளை தூண்டிய ஆங்கில கல்வி முறை எவ்வாறு இந்தியாவில் ஒரு புதிய தலைமுறையை உருவாக்கியது என்பது குறித்து விவரி.

26. ஹலஹ வேடர்களின் போராட்டம் குறித்து விவரி.

அல்லது

ஆரிய சமாஜத்தின் நோக்கங்கள் யாவை?

www.careerindia.com

CAREERINDIA



27. இரண்டாம் உலகப் போர் எவ்வாறு பேரழிவை ஏற்படுத்தியது என்பது குறித்து விவரி.

28. இந்தியாவின் உள்பிரச்சனையான வகுப்பு வாதத்தை (Communalism) அடியோடு ஒழிக்க நீவிர் கூறும் ஆலோசனைகள் யாவை?

29. முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்படாத பணியாளர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை அட்டவணைப் படுத்தி காட்டுக.

30. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விவரி. ?

அல்லது

ஓரிடத்தில் தொழிற்சாலை அமைக்க தேவையான காரணிகள் யாவை?

31. நிலநடுக்கத்தின் போது எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை ?

32. இந்திய பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் குண இயல்புகள் யாவை ?

அல்லது

இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகள் யாவை?

33. தபால் அலுவலகங்கள் ஆற்றும் பண பரிவர்த்தன சேவைகள் குறித்து கூறுக.

அல்லது

தொழில் முனைவோரின் இயங்கும் செயல் முறைகளை பட்டிய டுக.

V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் : $4 \times 4 = 16$

34. கி.பி. 1857-ல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

35. சமூக சமத்துவத்தை ஏற்படுத்த Dr. B. R. அம்பேத்கார் ஆற்றிய அரும்பணிகள் யாவை?

அல்லது

தீவிரவாதிகள் எவ்வாறு இந்திய விடுதலை போராட்டத்தை மேலும் வலுப்படுத்தி கூர்மைப் படுத்தினர்?

www.careerindia.com

CAREERINDIA



36. சிந்து நதி நாகரிக கால முதல் தற்போது வரை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவும் உறவுமுறையைப் பற்றி விவரி.

37. இந்திய பொருளாதார முன்னேற்றத்திற்கு விவசாயம் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது?

VI. 38. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வரும் இடங்களைக் குறிக்கவும் : 1 + 4 = 5

a) 23½° வடக்கு கடக ரேகை

b) கோவிந்த சாகர்

c) மும்பை - ஹை

d) தூத்துக்குடி

பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா. வினா எண் 38க்கான மாற்று வினா

பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை? 5

www.careerindia.com

www.careerindia.com